# பத்திரிக்கைச் செய்தி

## பெயர் மாற்ற சான்று வழங்க லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக இளநிலை உதவியாளர் அவர்களுக்கு 4 வருட சிறை தண்டனை விதித்து தீர்ப்பு

நீலகிரி மாவட்டம், மஞ்சூர் கிராமத்தில் வசித்து வந்த திரு.சிவக்குமார் என்பவர் கடந்த 2008ம் ஆண்டு தான் புதிதாக வாங்கிய தொழிலாளர் இல்லத்திற்கு பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்து பெயர் மாற்ற சான்று பெறுவதற்காக திருமதி.ஜெயலட்சுமி, இளநிலை உதவியாளர், கீழ்குந்தா நகர பஞ்சாயத்து அலுவலகம், மஞ்சூர், குந்தா தாலுகா, நீலகிரி அவர்களிடம் கேட்டதாகவும், சான்றிதழை கொடுப்பதற்கு தனக்கு லஞ்சமாக ரூ.1,800/- யை கொடுக்குமாறு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திருமதி.ஜெயலட்சுமி, இளநிலை உதவியாளர், அவர்கள் மீது புகார் மனு அளித்தார். இதன் பேரில் நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திருமதி.ஜெயலட்சுமி, அவர்களை புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.1,800/-யை பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது நீலகிரி மாவட்டம் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 14.11.2022 இவ்வழக்கில் குற்றவாளி திருமதி.ஜெயலட்சுமி, இளநிலை உதவியாளர், அவர்கள் புகார்தாரரிடம் லஞ்சம் ரூ.1,800/- லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு 3 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.1,000/- அபராதமும், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் பெற்றதற்கு 4 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.2,000/- அபராதமும் விதித்து, இத்தண்டணைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.